# தமிழம்



# அட்டைப்பட அறிஞர் பற்றி...

இனவுணர்வில்லா இழிந்த தன்மையும், அடிமைத் தாழும் பேறிய மிடிமை உள்ளமும், உண்மையை உணர்ந்துகொள்ள வியலா அறியாமை நிலையுமே இவற்றைத் தமிழ் இன முன்னேற்றத்தின் முட்டுக்கட்டைகளாகும். இத்தகைய தாழ்மை நிலைகளிலிருந்து தமிழனை விழிப்புறச் செய்து தன்மானத் தமிழனாய், உரிமை உணர்வுடைய மாந்தனாய் இவ்வுலகில் உயர்ந்தோங்கச் செய்வதற்கு தம் வாழ்நாளையே ஒப்படைத்துள்ளனர் அறிஞர் பெருமக்களில் பலர். அத்தகையோரின் அருந்தொண்டிற்கு உரிய பரிசாய் அவர்கள் நன்றி கெட்ட தமிழினத்திடம் பெற்றது, கொடிய வறுமையும், பெருந்துன்பமும், மீளாத் துயரமும், துயரஞ் சான்ற முடிவுமேயாகும். அவர்கள் வரிசையில் பாவேந்தர் பாரதிதாசனுர்க்கு அடுத்தபடியாக வைத்தெண்ணப்படத் தக்கவர் பர். சி. இலக்குவனரேயாகும்.

தம் வாழ்நாளின் இறுதி நிலையில் பொருளியல் தொல்லைகளினுல் மனஞ் சோர்ந்து, நோய்வாய்ப்பட்டு, 40 நாள்கள் மதுரை 'எர்சுகின்' மருத்துவ மனையில் சேர்க்கப்பெற்றிருந்து, 3.9.73 திங்கள் இரவு 10-15 மணிக்கு மீளாத் துயிலினைமேற்கொண்டார் பேராசிரியர் இலக்குவனர். இவரின் மறைவு தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் ஈடு செய்ய இயலாத பேரிழப்பேயாகும். தமிழன்னை நெஞ்சுரம் வாய்ந்த தம் மைந்தருள் ஒருவனை, — தமிழர்களின் தானைத்தலைவனை — இழந்து விட்டாள் என்றேதான் கூறல் வேண்டும்.

திரு. இலக்குவனர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திலுள்ள வாய்மை மேடு என்னும் சிற்றூரில் 14.11.1910 ஆம் ஆண்டில் பிறந்தார். தந்தையார் பெயர் சிங்காரவேலு ஆகும். தாயார் இரத்தினம் என்னும் பெயருடையவர். இவ்விருவர்க்கும் மூன்ருமகனாய்ப் பிறந்தவரே நம் பேராசியர். தொடக்கக் கல்வியைச் சிற்றூரிலும், உயர் நிலைக்கல்வியை ஊரத்த நாட்டிலும், தமிழ்க் கல்வியை திருவையாற்று அரசர் கல்லூரியிலும் பெற்ருர். கீழைக் கலை இளைஞன் (B.O.L.) முதுகலைப் (M.A.) பட்டங்களை சென்னைப் பல்கலைக்கழகத்தில் பெற்ருர். பண்டாரகர் (Doctor—Ph.d) பட்டத்தைத் தம் 50 ஆம் அகவைக்கு மேல்தான் அவரால் பெற முடிந்தது.

இப் பேராசியரின் தலைசிறந்த தமிழ்ப்பணி ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததே ஆகும். நூற்பாக்களின் நுண்பொருளை நுணுகித் தேர்ந்து, தமிழ் மரபையும், மொழியின் ஒழுகலாற்றையும் ஒட்டி, இனிய எளிய ஆங்கிலத்தில் அவர் மொழிபெயர்த்த செயல் சிறப்புமிக்கதாகும். இந்நூல் தொல்காப்பியர் கால, மொழி. இலக்கியம், மக்கள் நிலை ஆகியவைபற்றி நுண்மையாய் ஆராய்ந்து எழுதப்பெற்றுள்ளது இப் பணியை இவர் முடித்தது 1964 ஆம் ஆண்டில். இதற்காக சென்னைப் பல்கலைக்கழகம் பண்டாரகர் பட்டமளித்துச் சிறப்பித்தது.

தமிழரை வாழ்விக்கின்ற தனிநெறி, திருக்குறள் வழங்கிய முப்பாலின் வழியினதே எனத்தெளிந்து, தமிழ் அறம் தழைக்க அல்லும், பகலும், சொல்லிலும் செயலிலும், எழுத்திலும் தொண்டாற்றிய தமிழறிஞர் இவரே. இவர் எழுதியுள்ள திருக்குறள் உரை தனிச்சிறப்புடையது. நுண்மாண் நுழைபுலமிக்கப் புலவர்கட்கு மட்டுமல்லாமல் எல்லோர்க்கும் நன்கு பயன்படும் வகையில் அஃது அமைந்துள்ளது.

தாம் வெளியிட்டு வந்த 'குறள் நெறி' என்னும் திங்களிதழ்த் தாளிகை மூலம் இந்தித் திணிப்பால் தமிழ் அழியும் என்பதைக் கட்டுரைகள் வழி திட்டவட்டமாய் அறிவித்தார். இவர்தம் செந்தமிழ்க் காப்புணர்வு இவர்க்குச் சிறை வாழ்வினைப் பெற்றுத்தந்தது; தமிழ்ப் பேராசிரியர் பதவியினின்றும் நீக்கியது. திங்கள் தோறும் கிடைத்து வந்த பலநூறு வெண்பொற் காசுகள் நின்றன. இத்தகைய கொடுந்துன்பங்களுக்கெல்லாம் இவர் அஞ்சினரிலர்; சோர்ந்து மனஞ் சாம்பித் துவண்டாரிலர்; பதவி வேண்டும் என பிறரிடம் சென்று கெஞ்சினரிலர். கழகக் காலத் தமிழ்ப் புலவரின் மிடுக்கோடும், செம்மாந்த உள்ளத்தோடும், பெருமித உணர்வோடும் இயங்கிவந்தார்; எதிர்த்துவந்த இன்னல்களுக்கெல்லாம் ஈடுகொடுத்தார்,

தமிழால் இவர் வாழ விரும்பியிருந்தால், இவர்தம் சிறந்த அறிவாற்றலுக்கும். ஆராய்ச்சித் திறனுக்கும் பெரும் பொருள் திரட்டியிருக்கலாம். தமிழால் வாழ்பவர்களில் ஒரு சிலர் பெரும் பொருள் குவித்து வருகின்றனர். அரும் பெரும் மாளிகைகள் கட்டிக்கொண்டு இன்னியங்கிகளில் (CAR) இயங்கிக்கொண்டு இன்பமாய் வாழ்கின்றனர். ஆனல் இவர்தம் உண்மை நெஞ்சம் அப்படி வாழ ஒப்பவில்லை. தமிழுக்காகவே பிறந்தார், தமிழுக்காகவே வளர்ந்தார்; தமிழுக்காகவே உழைத்தார்; தமிழுக்காகவே மாண்டார். இன்றும் வறுமை நிலையில் உழன்று கொண்டிருக்கும் மொழிப் பெரும்புலவர். தேவநேயப் பாவாணர் அவர்களைப் போன்று தம் வாழ்நாளின் பிற்பகுதியை துன்ப நிலையிலேயே கழித்தார்.

இலக்குவனர் அவர்கள் தாம் பணியாற்றிய பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயின்ற மாணவரிடை மொழிப் பற்றையும் நாட்டுப் பற்றையும் தன்மான உணர்வையும் ஊட்டிவந்தார். தமிழக மக்கள் தம் வாழ்வியல் துறைகள் யாவற்றிலும் தன்னாட்சி பெற்றுத் திகழவேண்டும் என்றும் பிற மொழிக்குத் தாழ்தல் கூடாது என்றும் வேட்கை மிகக் கொண்டிருந்தார் கல்லூரிப் பயிற்று மொழியையும் தமிழாகவே ஆக்கல் வேண்டும் என்று வலியுறுத்த 1965-இல் தமிழ்ப் படையொன்று திரட்டி, மதுரையிலிருந்து சென்னையை நோக்கிப் பெரு நடைப் பயணம் மேற்கொண்டார். இதற்காக அப்பொழுதிருந்த பேராயக் (காங்கிரசு) கட்சி அரசு இவரைக் காப்புச் சட்டத்தின் கீழ் தளைப்படுத்திச் சிறையில் தள்ளியது.

நம் பேராசிரியர் இலக்குவனரை, 'தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் தீட்டிய திறலோன்; தொன்மைமிகு பழந்தமிழர் பண்பாடு பாடிய விறலோன்; வான்புகழ் வள்ளுவரின் குறளுக்குக்

தேன் உரை வடித்த தூயோன்; ஒண்டமிழ் பொழியும் தண்டமிழ்க் கொண்டல்; அறிஞர் ஏறு; தமிழ் ஞாயிறு; நடமாடும் செந்நாப் போதார்; பைந்தமிழ் வளர்த்த ஐந்தமிழ்ப் புலவர்; குறள்நெறி தன்னில் குவலயம் வாழ அறநெறி புகட்டிய அறிஞர்; முத்தமிழே மூச்சென்று நாளும் முழங்கியவர்; கன்னல் நிகர் செந்தமிழின் காவலன்; தனித்தமிழ் கொஞ்சும் இனித்த நடையுடையான்' என்றெல்லாம் புலவர் பெருமக்கள் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

பர். இலக்குவனார் தம்முடைய இரு மனைவியரையும், பதினொரு பிள்ளைகளையும் 'வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்தாற்போல்' விட்டுப் பிரிந்துவிட்டார். பிள்ளைகள் பதினொருவரில், ஆண்கள் அறுவர்; பெண்கள் ஐவர். பெண்களில் ஒருவர்க்குக்கூட மணமாகவில்லை. பிள்ளைகளில் திரு மறைமலை என்பார் கிருட்டினகிரியில் பேராசிரியராயும். திரு. திருவேலன் என்பார் கல்பாக்கத்தில் பொறியாளராயும் புலவர் சி. திருவேங்கடம் என்பார் குடும்பப பொறுப்பிலும் உள்ளனர். மற்றவர்கள் படிக்கின்ற பருவத்தினர் மறைந்த பேராசிரியருக்கு ஒரு வீடு உள்ளது அது 6000 உருபா கடனில் இருக்கின்றது. திருப்பரங்குன்றத்தில் உள்ள அச்சகமும் 4000 உருபா கடனுக்கு ஈடு செய்யப்பட்டுள்ளது. இப்பணம் இவரின் மருத்துவச் செலவுக்காக வாங்கப் பெற்றது. குறைந்தது உருபா 10,000 இருந்தால் கடனில் மூழ்கப் போகும் தமிழ் காத்த பேராசிரியரின் உடைமைகளைக் காக்கலாம்.

தமிழாய்ந்த தமிழனைத் தலைவனாகக் கொண்டில்லாத அரசு அக்காலத்தில் பாவேந்தரைப் புறக்கணித்தது. இக்கால் அந்நிலையில்லை, எனவே தமிழ் காக்கப் போராடிய இலக்குவனார் குடும்பம் சீரழிந்து போகாமல் காப்பதற்குத் தமிழக அரசே துணை செய்தல் வேண்டும். செல்வர்களும் தமிழன்பர்களும் தங்களால் இயன்ற உதவியினை அவருடைய குடும்பத்திற்கு அளித்தல் வேண்டும். அரசும் மக்களும் ஆவன செய்வார்களாக.

---

## திருத்திப் படிக்க

| பிழை | திருத்தம் | பக்கம் | வரி |
|---|---|---|---|
| மானந்தை | மானத்தை | 22 | 27 |
| கதனிக் | தனிக் | 23 | 7 |
| கருந்தட்டைக்குடி | கருந்திட்டைக்குடி | 27 | 38 |
| தராவிடச் | திராவிடச் | 32 | 10 |
| மகிழுத்தில் | மகிழுந்தில் | 39 | 3 |
| சேனளவி | சேணளவி | 39 | 20 |
| காணியம் | கரணியம் | 41 | 11 |
| செய்து | செய்தி | 48 | 37 |